**மின் அஞ்சல்.**

அனுப்புநர் பெறுநர்

முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., ஆணையர்,
நகராட்சி நிர்வாக இயக்குநர், பல்லவபுரம் நகராட்சி.
சேப்பாக்கம், சென்னை–5.

08341

ந.க.எண் : 57811/09/ஆர்–1 நாள். 30.11. 2009.

ஐயா,

பொருள் காலிமனை வரி –பல்லவபுரம் நகராட்சி – காலிமனை வரி நிர்ணயம் செய்தல்– தெளிவுரை கோரியது – சம்பந்தமாக.

பார்வை
1. இவ்வலுவலக சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 38714/09/ஆர்1, நாள். 02.04.09.
2. அரசு ஆணை (ப) எண். 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (தேர்தல்) துறை, நாள். 20.08.09.
3. தஙகள் அலுவலக கடித ந.க.எண். 2003/07/அ1, நாள். 25.11.09.

*******

பார்வை 3–ல் காணும் தஙகள் கடிதத்தில் கோரிய விவரஙகள் பின்வருமாறு தெரிவிக்கப்படுகின்றது.

1. காலிமனை வரி விதிப்பில் பழைய வரி விதிப்பினை மாற்றி தற்போது வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணைப்படி 01.10.2009 முதல் திருத்திய புதிய அரசு ஆணைப்படி வரி விதிப்பு செய்து வசூலிக்கப்பட வேண்டும். 01.10.09–க்கு முன்பு ஏற்கனவே உள்ள கேட்பின் அடிப்படையில் வரி வசூலிக்கப்பட வேண்டும் புதிய அரசு ஆணைப்படி கேட்பு முந்தைய வரிவிதிப்பை விடக் குறைவாக இருப்பினும் அதனையே வசூலிக்க வேண்டும்.
2. காலிமனை வரியானது, வரி விதிப்பு செய்யப்படும் அரையாண்டுக்கான வரியையும் சேர்த்து 13 அரையாண்டுகளுக்கு வரி விதிப்பு செய்யப்பட வேண்டும் என பார்வை 1–ல் காணும் கடிதத்தில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. பத்திரம் 13 ஆண்டுகளுக்கு முன்பு பதியப்பட்ட நிகழ்வில் மட்டுமே இது பொருந்தும். மற்ற இனஙகளில் பத்திரம் பதிவு செய்த நாளில் இருந்துதான் காலிமனை வரி விதிப்பு செய்யப்பட வேண்டும்.

3. இதுவரை காலிமனை வரிவிதிப்பு செய்யாத அனைத்து இனஙகளுக்கும் தற்சமயம் வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணையின்படி காலிமனை வரி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

ஒம்/– து. சந்திரசேகரன்,
நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக .

<u>நகல்:-</u>

1. அனைத்து நகராட்சி ஆணையர்கள்,
2. அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்,
3. அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.